www.padippakam.com

## அறிவீர்



## அன்னியப்படுத்துவீர்

புளொட் அமைப்பின் இருந்து வந்த புரியாதபுதிர் சௌரி காந்தன் அல்லது A.G. காந்தன் என்ற நபர் தொடர்பாக இந்த இருவருடைய பின்னணி என்ன நிலைபாட்டை எடுத்துள்ளது என்பதை புரட்சிகர சக்திகள் ஒவ்வொன்றும் அறிய ஆவலாக இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. தலைநாயகத்தின் உணர்வு நிறைந்த ஆதரவாளர்கள் A.G.K தொடர்பாக அமைப்பின் முடிவை பத்திரிகை மூலம் எதிர்பார்ப்பதையும் புளொட்டின் ஸ்தாபகர்களில் முக்கியமான நபரான A.G.K குறித்து இருவருடைய பின்னணி எந்த அரசியல் நிலைபாட்டையும் அமைப்பிலிருந்து அடிப்படை உரிமைகள் நீதி உட்பட இல்லாது வெளியேற்றப்பட்டதையும் உங்களுக்கு அறியத் தருவதின் மூலம் எமது அமைப்பு உடனான உங்களுடைய உறவு மேலும் புரட்சிகர நோக்கு நிலையில் இருந்தும் ஒரு சனநாயக அடிப்படை முறை பின்பற்றப்பட்டது என்ற பார்வையில் மேலும் பிணைக்கப்படுவீர்கள் என நம்புகிறோம்.

மக்கள் விடுதலை அமைப்பு ஒன்றினுள் மாறுபட்ட கருத்துக் கொண்ட நபர்களும் பிற்போக்கு சக்திகளுடன் உறவு வைத்து போராட்டப் பாதையை திசைதிருப்பக் கூடிய சுயநலவாதிகளும் அமைப்புகளுள் தோன்றுவதும், அரசுகளாலும், உளவு நிறுவனங்களாலும் திட்டமிட்டு அனுப்பப்படுவதும் விடுதலை இயக்கங்களின் வரலாற்றில் நடந்தும், இன்றும் நடந்து வருகிறதுமாகும். இங்குள்ள பிரச்சனை என்னவென்றால் ஒரு மக்கள் அமைப்பு இத்தகைய நபர்கள் தொடர்பாக கடைப்பிடிக்கும் கண்ணோட்டம், அணுகுமுறை எவ்வாறானது, அது என்னவாக இருக்க வேண்டும் என்பதுதான். இதில் ஒவ்வொரு நாட்டின் போராட்ட அனுபவத்தையும் பல்வேறு வித அணுகுமுறைகளையும் நாம் பார்க்க முடிகிறது. இலங்கை வரலாற்றின் அண்மைக்காலங்களில் முரண்பட்ட கருத்துக் கொண்டவர்கள், மற்றும்.

படிப்பகம்

www.padippakam.com



பிற்போக்கு சக்திகளுடன் உறவு கொண்டவர்களுக்காக.., ஒரு துப்பாக்கித் தோட்டாவை செலவழிப்பதே விசேடமாக- சிங்கள மக்கள் மத்தியிலுள்ள J.V.P, தமிழ்ப்பகுதி களில் உள்ள எல்லா சிறுமுதலாளியப் போராளி அமைப் புகளும் கடைப்பிடித்து வரும் அணுகுமுறையாக உள்ளது. இத்தகைய நபர்களுடன் கருத்துப் போராட்டமோ அல்லது அவர்கள் பற்றிய நோக்கங்களை- மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தல்கள், எச்சரிக்கை நடவடிக்கைகள் இன்றி போராளி அமைப்புகள் தமது அரசியல் பலவீனங்களையும், வக்கிர நடவடிக் கைகளையும் வெளிப்படுத்தும் விதத்தில் "சுற்றிவளைப்பு" அல்லது "வெடி, தலைக்குள் உப்பு மிளகாய் வைத்து தைத்த கோரத்தனமான சித்திரவதைகள்" மூலம் நபர்களை அழித்துவிட்டு பின்னர் குற்றம் சுமத்தி தெருச் சந்தியில் குற்றங்களை பட்டியலிட்டு இருவகை வழக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது.

போராளி அமைப்புகளின் இத்தகைய நடவடிக்கை களுக்கு பலியாக்கப்பட்டவர்களில் உண்மை- யான உளவாளிகள், பிற்போக்கு சக்திகளுடன் உண்மையில் விரோதிகள் என்று சொல்லக்கூடியவர் களை விடுத்து அழிக்கப்பட்ட நபர்கள், புரட்சி யாளர்கள், தலைமைகள், தொழிலாளர்கள், ஒத்துழைப்பாளர்கள், வக்கிர உணர்வுக்கு உட்ப- டுத்தப்பட்ட அப்பாவிகள் என்பது நமது போராட்டத்தின் வரலாற்றில் நிரூபிக்கப் பட்டுள்ளது. இந்த கறைப்படிந்த அத்தியாயங்கள்- மத்தியில் இருந்து வெளிவரும் அப்பழுக்கற்ற அரசியல் நிலைப்பாடுகளை நிராகரித்து இயங்கும் நாம் ஆரம்பக்காலங்களில் இருந்தே புரட்சிகர- அரசியல் கொள்கையை செயல்படும் புரட்சிகர இயக்கங்கள் மத்தியில் கூட மாறுபட்ட கருத்துடன் அரசியல் நீதியானதும், அமைப்பின் நடைமுறை கள் பாலும் ஈடுபாடு கொண்டவர்கள்- அரசியல் ரீதியாக முரண்பாடுகள் பற்றி விவாதங்களில் ஈடு படுவர். இத்தகைய நபர்களின் சிந்தனையில் இயக் கங்களின் செயற்பாட்டிலும் பதிலடிக்கு இல்- லாதுள்ள பலவீனமான தலைமைகள் அவ்வாறு கேள்விக்குறியிடும் நபர்களை அடையாளம் தெரிந்து வெடி வைத்துக் கொல்லுகள், புரட்சி துரோகிகள் மற்றும் சமூக விரோதிகள், ஒழுக்கமற்றவர்கள், இந்தியாவின் கைக்கூலிகள் ... நாயக அணுகுமுறைகள்" ஒழிப்பதின் பேரில் ... வாக அமர்த்தப்பட்டு யாழ்ப்பாண வீதிகளில் பிணமாக போடப்பட்டும் வெளியேற்றப்படும், கொல்லப்படும் - என்ற சிறுமுதலாளிய அராஜக பாணியில் செயல் படும் புரட்சிகர மத்தியிலானதும் அவர்கள் தொடர் கொண்டுள்ள இடங்களிலும் இரகசியமாகப் பேசப் படுவதை அறிவோம்.

இந்நிலையில் [பாட்டாளி- வர்க்க முன்னணியினராகிய] நாம் புரட்சிகர அமைப்புகளில் நபர்கள் தொடர்பாக கொள்கை யாக இந்த ஜனநாயகமான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இதில் அக்கறை எடுக்கத்தவறினால் புரட்சி என்னும் பெயரால் உண்மைப் புரட்சியாளர்கள் அழிக்கப்பட்டு பெருந் தவறானதை நாமும் தொடர்பவர்களாகவே மாறுவோம்.. என உணர்த்தி எச்சரிக்கின்றோம். எப்படிப்பட்ட முற்போக்கு சக்திகளையும் சரியான அரசியல் ஸ்தாபன மார்க்கங்கள், நேர்மையான அணுகுமுறைகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு, மக்கள் முன் அம்பலப்படுத்தி செயலற்றவர்களாக்க வேண்டும். அதனில் ஒரு வெளிப்பாடுதான்.. A.G.K மீது தொடரப்படுவது பிரச்சனம் எதிர்கொண்டிருக்கும் அணுகுமுறைபாடும்.

முதலில் ஒன்றைத் தெளிவாக்கொள்வோம்.. A.G.K, அமைப்பை விட்டு வெளியேற்றப்பட்டதற்கான முக்கியக் காரணம் கொள்கை முரண்பாடு அல்ல. அவரது அரசியல் பாதை, ஸ்தாபனப் பாதை தொடர்பாகிய கருத்து மீதான கருத்தியல் போராட்டத்தை இன்னமும் சிலகாலம் நடத்தி இருப்போம். அத்தவறான கருத்துக்களுக்கு எதிராக வெளியேயும் உள்ளேயும் போராட வேண்டிய கடமை எமக்கு என்றும் உள்ளது அதைத் தொடர்ந்து செய்வோம். அவர் உடனடியாக அடிப்படை உறுப்பினர் உரிமையில் இருந்தும் வெளியேற்றப்படுவதின் காரணம்.. சர்வதேச அளவில் தன்னார்வக் குழுக்களாகப் பிற்போக்கு நிதி நிறுவனங்களுடன் அவர் தொடர்புகொண்டு வந்ததுக் கண்டுபிடிக்கப்பட்டதேயாகும். நாம் இங்கு அவருக்கும் தன்னார்வக் குழு நிதிநிறுவனங்களுக்கும் இருந்து வந்த தொடர்புகள் பற்றிய சந்தேகம் அது தொடர்பாக அமைப்புள் இருந்துவரும் போராட்டம்(கள்) உறுதிப்படுத்தல்களையே இங்கு முன் வைக்கிறோம். அவற்றின் போக்கிலேயே அவரது அரசியல் இழிவுபடிகளும் சுட்டிக்காட்டப்படுகின்றது

AGK அறிமுகம்... இலங்கை கம்யூனிஷக் கட்சியில் இணைந்து செயல்பட்டு வந்த இவர் சர்வதேச அளவில் சோவியத் கம்யூனிஷ கட்சியின் பாதை மீது சீனகம்யூனிச கட்சி நடத்தி வந்த மாபெரும் விவாதத்தின் பின்னர்.. கம்யூனிஷ அகிலத்துக்குள் ஏற்பட்ட பிளவின் விளைவாக உலகளாவில் கம்யூனிஷ கட்சிகள் பிளவுபட்ட போது. இலங்கையிலும் சோவித் சார்பு கம்யூனிஸ்டுகள் - சீனச் சார்பு கம்யூனிஸ்டுகள் என பிளவுக்கண்டது. இதில் சீனச் சார்பு கம்யூனிச கட்சியின் நிலைபாட்டை ஏற்று செயல் பட்ட AGK. அக்கட்சியில் தமிழ்மக்களின் தேசிய சுய நிர்ணய போராட்டம் மற்றும் சிலப் பிரச்சனைகளில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளாலும் செயலற்ற தன்மைகளாலும் சோர்வடைந்த பலர் வெளியேறிக் கொண்டிருந்த போது இவரும் ஒதுங்கிக்கொண்டார். பின்னர் இவர் "இளைஞர் காற்று இயக்கத்திலும்" விவசாய சங்க வேலைகளிலும் கிராமிய உழைப்பாளர் சங்கத்திலும் ஈடுபட்டு வந்தார. 1975-க்குப் பின்...

படிப்பகம்

www.padippakam.com


..தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையில் முரண்பட்டவர்கள் சிலர் புதிதாக ஒரு மார்க்சிச-லெனினிய கட்சியைக் கட்டும் பணியிலோ ஈடுபட்ட போது அதிலோ அல்லது தனித்துவமாக ஒரு கட்சியைக் கட்டும் பணியிலோ இவர் ஈடுபடவில்லை.

1983-ன் இனக்கலவரத்தின் பின் தமிழ் பகுதிகளில் சிறு முதலாளிய சிந்தனைக் கொண்ட இயக்கங்கள் பிரபல்யம் அடையத் தொடங்கியது. அரிச்சுவடி புரட்சிகர அரசியலாளர்களுக்குக் கூடத் தெரியும். இக்காலங்களில் சந்தர்ப்பவாத மார்க்சியம் பேசிய E.P.R.L.F, PLOT, EROS போன்ற அமைப்புகளில் கம்யூனிசக் கட்சிகளில் இருந்து ஒதுங்கியவர்களும், இடதுசாரிக் கருத்துக்களால் ஆட்கொள்ளப்பட்டவர்களும்.. இணைந்து வேலை செய்யத் தொடங்கினர். இக்காலங்களிலும் A.G.K விவசாய சங்க வேலைகளில்தான் கவனம் செலுத்தி வந்தார். 1984-ன் பிற்பகுதியில் இந்தியாவிற்கு வந்து சென்றிருந்த இவர் இலங்கையின் தேசியப் இனப்பிரச்சனைப் பற்றிய நூல் ஒன்றை "லோகன்" என்ற பெயரில் வெளியிட்டார். அங்கு PLOT அமைப்புடன் நடந்த சந்திப்புக்குப் பின்பு தளத்திற்கு வந்து தானும் தன்னுடன் இருந்த சிலரையும் PLOT-ல் இணைத்துக் கொண்டார். AGK அன்றைய நிலையில் தான் எடுத்த நிலைப்பாடு பற்றி கேள்விக்கேட்ட பலரிடம் PLOT இயக்கம் தான் இருக்கக்கூடிய அமைப்புகளில் சிறந்த இடதுசாரி சிந்தனைப் பாதையில் ஈடுபாடுக் கொண்ட இயக்கம் என்றும் அதற்குள் இருக்கும் இடதுசாரி சக்திகளை வளர்த்து அணியப்படுத்துவதன் மூலம் தலைமையை இடதுசாரிப் பாதையில் செயல்படச் செய்யலாம். தலைமை மார்க்சியப் பாதையில் போதிய ஆர்வமுடன் இருக்கின்றது. அறிவை நம் போன்றவர்கள் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

1984-ம் ஆண்டு பிற்பகுதியிலேயே PLOT-க்குள் அத்தலைமையின் அராஜக நடவடிக்கைகள், உள் அமைப்பு சனநாயக மறுப்புக்கும், மூர்க்கத்தனமான இராணுவ ஒழுங்கு முறைகளுக்கும் எதிரான போராட்டம் உருவாகியது. தலைமைதனதும் கொடியக் கொலைக் கரங்களால் உள் அமைப்புப் போராளிகளை அடக்கியது. 1985-ல் PLOT-ன் தலைமையில் இருந்த இடதுசாரி சிந்தனைக் கொண்டவர்களும் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களும் மோசமான பயமுறுத்தல்களுக்கு மத்தியில் வெளியேறி "புதியதோர் உலகம்" நாவல், "தீப்பொறி" பத்திரிக்கையூடாகவும் PLOT தலைமையின் போலித்தனத்தை அம்பலப்படுத்தினர். இவை இந்தியாவில் நடந்தது. தளத்தில் சில முக்கியப் போராளிகள் (நல்), பல கொலை செய்யப்பட்டனர்.

1986-ல் PLOT இயக்கத்துக்குள் நடந்த உள்போராட்டம், அதை நசுக்க தலைமை மேற்கொண்ட அராஜக நடவடிக்கைகளின் கசி

படிப்பகம்

www.padippakam.com



அராஜக தலைமைக்குள்ளேயே தலைமை-அதிகாரத்திற்கு நடந்த போட்டிகளினாலும் இயக்கம் அந்நிலையில் நன்கு சிதைவடைந்தது. இந்நிலையில் பிளவுண்ட "ராஜன்" தலைமையிலான ஒரு அராஜக கோஷ்டி தனது நேரடிக் கண்காணிப்பில் உள்ளமைப்பு சனநாயகத்திற்கு நின்றப்-போராளிகளை ஆரம்பத்தில் பயங்கர-மான சித்திரவதைகளை, கொலை மிரட்டல்களைக் கொண்டு அடக்கியதோடு மறைத்து "சந்ததியார்" போன்றப் போராளிகளின் இருப்புகளை தூக்கி அரசியல் ஆதாயத்-திற்கு பயன்படுத்து வந்தது.

முகுந்தன் தலைமையை தகர்க்கும்-கருவியாக நின்று தான் (ராஜன்) செய்த எந்த-அராஜகங்களையும் சுயவிமர்சனம் செய்துக் கொள்ளவில்லை. இவ்வேளையில் தான் தளத்தினின்று இயங்கி வந்த PLOT-இன் தளக்கமிட்டி PLOT இயக்கத்தினை புனரமைக்க தளமாநாட்டை கூட்டியது. இம்மாநாட்டை நடத்த முழு அளவில் AGK பின்னணியில் இருந்து செயல்பட்டார். ஆனால், மாநாட்டு முடிவில் ஒதுங்குவது தெரியாமல் ஒதுங்கி விட்ட அவரைத் தேடிப்பிடித்து மாநாட்டு தீர்மானங்களை அமுல் நடத்த பின் தளம் சென்று மாநாட்டை கூட்டும் முயற்சியில் ஈடுபட்ட தளமாநாட்டு உறுப்பினர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக சென்ற AGK அங்கு முகுந்தன்/ராஜன் கோஷ்டிகளாக இருந்தவர்-களுடன் ஒருங்கிணைப்பு கூட்டங்களில் பங்கு வகித்தார். தளமாநாட்டு கமிட்டியே முகுந்தன்-ராஜன் கோஷ்டி சண்டையில் பிளவுபட்டு சிதைந்த போது, தளமாநாட்டு கமிட்டியின் தனித்துவத்தை பேணமுடியாத நிலையில் AGK-ம் அவருடன்-இருந்த சில இடது சிந்தனைக்காரப் போராளி-களும் ராஜன் கோஷ்டியை ஆதரித்துக்கொண்-டனர். இந்நிலையில் தளமாநாட்டுக் கமிட்டியில் இருந்த சிலர் AGK-ன் நடவடிக்கையை எதிர்த்தனர் A.G.K அன்று பெரும் அராஜகவாதியை எதிர்க்க சின்ன அராஜகவாதியை நாடினார். பின்னர் ராஜன் கோஷ்டி நடாத்திய மாநாட்டின் பின் அச் சின்ன அராஜகக் கூட்டத்தையும் விட்டு வெளி யேறினர் அல்லது வெளியேற்றப்பட்டனர்.

1986-ன் பிற்பகுதியில் இவர்கள் PLOTஇல் முகுந்தன் ராஜன் கோஷ்டியை-அதன் அராஜகங்களை பற்றிய மதிப்பீடு ஒன்றை முன் வைத்தனர். இதில் தாங்கள் இழைத்த தவறுகளையும் இராணுவ[illegible] வெளிப்படுத்தினர்

படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில் தான் சிறுமுதலாளிய சிந்தனைக் கண்ணோட்ட அமைப்புக்களின் அராஜக, தனிநபர்வாத தலைமைகள் பற்றிய சரியான புரிதலுடன் நீண்டகால கண்ணோட்டத்தில் சுதந்திரமான பாட்டாளி வர்க்கக் கட்சியின் அவசியமும் அதற்கான தேவையும், தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தில் உடனடி வேலையான "அராஜக எதிர்ப்பு சக்திகளை ஒரணியாக்குதல்" என்ற குறைந்தபட்ச அரசியல் இலக்குகளுடன் செயல்பட்டு வந்த "புதுக்குரல்" அணி அராஜக எதிர்ப்பு அரங்கில் உள்ள சக்திகள் தொடர்புகள் உருவாகின்றன. A.G.K உடன் இருந்த சில தோழர்கள் முன்னரே அறிமுகமானவர்கள் நமக்கு என்பதும் குறிப்பிடத்தக்கது.

A.G.K பகுதியினருடன் முதல் கட்டமாக "அராஜக எதிர்ப்பு முன்னணி" என்ற அரசியல் இலக்கு வேலைகளுடன் நமக்கு அமைப்பு உறவு தொடங்கியது. A.G.K. மீது தன்னார்வ குழுக்களுடன் உள்ள பிற்போக்கு தொடர்பு என்ற பிரச்சனையை நாம் முதன் முதலில் அறிந்தது இரண்டு வழிகளில். முதலாவது; சந்தர்ப்பவாத மார்க்சியம் பேசிக் கொண்டும் அராஜக தலைமைகளுடன் ஒட்டிக் கொண்டும் அரசியல் பிழைப்பு நடத்தும் சில நபர்கள். இவர்கள் A.G.K. யுடன் ஆரம்பத்தில் இருந்து செயற்பட்டு வந்தவர்கள். இவர்கள் இயக்க நிதி தேவைக்கு தாம் சார்ந்த சிறு முதலாளிய தலைமைகள், போதை வஸ்து கடத்தல், ஆள்கடத்தல் மூலமும், இந்திய உளவு நிறுவனம் RAW கொடுக்கும் நிதிகள் ஊடாகவும் இயக்கம் கட்டப்படுவதை எதிர்க்காதவர்கள் என்பதை ஊன்றி கவனிக்க வேண்டும். இரண்டாவது; தமிழீழ தேசிய விடுதலைக்காக மார்க்சிய லெனின சிந்தனையில் இருந்து செயல்படும் P.L.F.T, N.L.F.T T.M.PP போன்ற அமைப்புக்களின் தோழர்களும் இதே குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர். ஆனால் இவர்களும் வெறும் குற்றச் சாட்டுக்களுடன் நிறுத்திக் கொண்டனர். சிறு முதலாளிய இயக்கங் களின் அராஜக தலைமைகளுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் பாடம் கற்ற பல போராளிகள் மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் தேவை போராட்டத்தின் அடுத்த கட்டம் நோக்கிய அவர்களுடன் வெளியேறிக் கொண்டிருந்தபோது அத்தகைய சக்திகளை சரியான பாதையில் சிந்திக்க தூண்டுவது, நெறிப்படுத்துவது, புரட்சிகர அரசியல் அமைப்பு பாதையிலும் செயல்பாட்டிலும் சங்கமிக்க வைப்பது என்ற கொள்கைநோக்கில் இருந்து ஒரு திட்டமிட்ட நோக்கில் இருந்த வேலையை இவர்கள் செய்யத் தவறினர். பதிலாக ஆங்காங்கே தத்தமக்கு தேவையான சில சக்திகளை பொறுக்குவது

படிப்பகம்

www.padippakam.com



இது விஷயத்தில் இப்போது தமது அனுபவங்களை தொகுக்கும் வேளையிலாவது அதைக் குறித்துக் கொள்வர் என நம்புகிறோம்.

சரி இவற்றை விரிவாகச் செய்கின்ற அளவுக்கு அவர்களுக்கு அரசியல் அமைப்பு எல்லைப்படுத்தல்கள் இடங்கொடுக்காதிருந்தாலும் 1983 இனக்கலவரத்தை ஒட்டி ஏற்பட்ட எழுச்சி அலையானது 1987 உடன் சிறுமுதலாளிய இயக்கங்களின் அகபலயீனங்களிலும், புறநிலை மாற்றங்களினாலும் ஒரு தேக்க நிலையை அடைந்த வேளையில், தேக்க நிலையை உடைத்து அடுத்த கட்டப் போருக்கு தம்மைத் தயார்படுத்த விரும்பும் புரட்சிகர எண்ணம் கொண்ட எண்ணம் கொண்ட சக்திகளை மீண்டும் ஒரு திரிபுவாத பிற்போக்கு கொள்கையும் நடைமுறையும் கொண்ட நபர்கள் தமக்குள்ள சில திறமைகளை முத்திரைகள் கொண்டு அடுத்த கட்டப் போராட்டப் பாதையை திசைமாற்றியும் நல்ல சக்திகளை தவறான பாதையில் பழைய்க்கவும் கூடிய தன்மையின் என்றாலும் குழுக்கள் என்றாலும் அவர்களைப் பற்றிய ஒரு விரிவான அம்பலப்படுத்தல்களை ஆதாரத்துடன் முன்வைத்து உண்மையான போராட்ட சக்திகளுக்கு விழிப்புணர்வையும் எச்சரிக்கையையும் செய்யப்பட்டிருக்க வேண்டும் இத்துறையும் பாரிய வேலைகளை என்பதையும் நாம் சொல்ல விரும்புகின்றோம்.

ஓர் அரசியல் இயக்கத்தில் அவ்வியக்கத்தின் கொள்கைகளுக்குட்பட்டு செயற்படும் ஒவ்வொருவரும் உறுப்பினராக முடியும். அதே போன்று ஒரு புதிய ஆட்சியில் ஒரு அமைப்பை கட்டும் போது பலவீனமான பின்னணிகளுடன் இருந்து வந்தவர்களும் பொதுக் கருத்துக்குட்பட்டு செயல்படத் தயாராக இருக்கும் போது அதிலுள்ள அந்த நபர்களின் அரசியல் செயல்பாடு என்ன என்பதையே முதன்மையாகக் கொள்கின்றோம் அதே வேளை நபர்களின் பின்னணி என்ன என்பதையும் கணக்கில் கொள்கின்றோம். ஆனால் உடனடியாக அத்தகைய இல்லாத பின்னணிகளில் ஒரு வகையான இருட்டுக் கொடுப்பை மேற்கொண்டு உரிய நிலைகளில் இணைந்து சில சந்தேகத்திற்கு இடமான பின்னணி உறவுகளை அந்த நபரிடம் நேரடியாகக் கேட்டு அதற்கான அவரின் பதிலைப் பொறுத்து, ஆனால் முழு விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியுள்ளது. இங்கு நாம் விழிப்புணர்வு, விழிப்புணர்வுடன் கூடிய செயற்பாடு, சந்தேகம் இதனுடன் கூடிய ஒற்றறியும் நடவடிக்கை இவற்றை நன்கு பிரித்து புரிந்து கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



நிலவும் சந்தேகம், தன்னார்வக் குழுத் தொடர்பு பற்றிய குற்றச் சாட்டு இவை குறித்து அவர் கருத்தைக் கேட்டோம்.

"என் மீது முன் வைக்கப்படும் இக் குற்றச் சாட்டுக்களை இவர்கள் சொல்லுகின்ற யாரும் (PLFT, NLFT, சில இந்திய M.L இயக்கங்கள்) என்னுடனே பேசும் போது நேரடியாகக் கேட்காமல் ஏன் மறைத்து விளையாடுகின்றனர். இது என் மேல் உள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடு என்றே நான் கருதுகிறேன். அரசியல் பிரச்சினைகள், வேலைகளைத் தீர்க்கவும், வழிகாட்டவும் முடியாதவர்கள் என்மீது பொறாமையுடன் திட்டமிட்டுச் செய்யும் பிரச்சாரம் என நான் நினைக்கிறேன்." தோழரே அப்படியானால் இது போன்ற காழ்ப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுவதற்கு இன்று கூட நீங்கள் தொடர்பு கொண்டுள்ள நபர்கள் அமைப்புக்களைச் சுட்டி தொடர்புகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? இப்பிரச்சினையை நினைத்து நான் மிகவும் வேதனைப் படுவதுண்டு. எதிர்காலத்தில் ஒரு கட்சியைக் கட்டும் முயற்சியும் தெளிவும் கொண்டு செயல்படும் இவர்கள் (புதுக்குரல் தோழர்கள்) அதே போன்ற முயற்சியில் இருக்கும் எம்முடன் (A.G.K பகுதி) இரு பகுதியும் ஒன்றிணைந்து கொள்ள நடக்கும் இப்பேச்சுக்களில் இதை முன்வைத்தல் நல்லது. இந்தியாவில் இது போன்ற பிரச்சாரங்கள் பலப்பட்டதற்கும் இன்றும் தொடர்வதற்கும் ஆன அடிப்படையை நான் கூறியாக வேண்டும் என்றார்.

CPI (M.L) V.M கட்சித் தோழர்களுடன் எனக்கு தொடர்பு இருந்தது. தமிழ் நாட்டில் தன்னார்வக்குழுக்களுள் புகுந்து வேலை செய்வது என்ற நிலைப்பாட்டில் இவர்கள் செயல்பட்டனர். நான் 1978 இல் வந்த போது அந்தத் தோழர்கள் சில இடங்களில் என்னைத் தங்க வைத்தனர். சில தொடர்புகள் ஏற்படுத்தித் தந்தனர். பின்னர் 1984 ல் வந்தபோதும் முதல் தொடர்புள்ள அந்தத் தோழர்களைச் சந்தித்தேன். சில தோழர்கள் அமைப்பை விட்டு தன்னார்வக் குழுவை இயக்குகின்றனர். அவ் அமைப்புள் இப்பிரச்சினைகளை கடுமையான வாதவிவாதங்கள், தர்க்கங்கள் நடந்து சில முடிவுகள் எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். நான் 1984 ல் தமிழ்நாட்டில் தான் "இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைகள்" என்ற புத்தகத்தை வெளியிட்டேன். அப்போதும் அதற்குப் பின்னரும் CPI (ML) P.W வைச் சேர்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த தோழர்கள் நான் அப்புத்தகத்தை தன்னார்வக் குழுப் பணத்தைக் கொண்டு வெளியிட்டதாகவும் எனக்கும் தன்னார்வக் குழுவிற்கும் தொடர்பு உண்டு என்ற பிரச்சாரத்தை இங்கும் தமிழீழத்தவர் மத்தியிலும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இது எனது அரசியல் வாழ்விற்கு பல சிக்கல்களை ஏற்படுத்துள்ளது. இப்போது 1986 ல் தமிழ் நாடு வந்த போதும் தங்க இடமின்றி எமது இயக்கங்களின் நெருக்குதலுக்கு இடையில் பழைய தொடர்புகளில் சந்தித்து தங்கியிருந்தேன். மற்றப்படி இந்தப் பிரச்சாரத்தில் இருந்து மீளவும் முயற்சி எடுத்து வருகிறேன்.

படிப்பகம்

www.padippakam.com



தன்னார்வக் குழுக்களின் தொடர்பை கண்ணை மூடிக் கொண்டு நிராகரிக்காமல் சமூகத்தின் செயல்பாடுகளில் அவற்றின் பங்கை சரியாகப் பார்த்து புரட்சிக்கு எவ்வாறு எதிரானது என்பதை நாம் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்" என்றார்.

அவர் தரப்புக் கருத்துக்கள் கேட்ட பின்னரும் விழிப்புணர்வுடன் இணைந்து செயல்படலாம் எனவும் மீண்டும் "புதுக்குரல்" தோழர்கள் கூடி விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது.

திருச்சிக் கூட்டிடில் ஒரு கிறிஸ்தவ தன்னார்வக் குழு ஒன்றில் A.G.K தங்கியிருந்து, வேறு சில தோழர்களை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றது. முதலானவை இந்திய மக்கள் முன்னணித் தோழர்களே. இவர்கள் இருந்த நமது அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள். தன்னார்வக் குழுக்களை இயக்கும் நபர்களும் இவர்களே. அக்குழுவிற்கு A.G.K ஆல் அரசியல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டது. மேற்கண்ட இச் செய்திகளின்படி 06.03.87 நடந்த கூட்டத்தில் கடுமையான தர்க்கங்கள் நடந்தது. தோழர் ஒருவர் A.G.K இடம் "உங்களுக்கும் (A.G.K க்கும்) தன்னார்வக் குழுவுக்கும் உள்ள தொடர்பு பொய்யானது என நீங்கள் மறுத்துத் தெரிவித்தீர்கள். ஆனால் இப்பொழுது கிடைக்கும் செய்திகள் மேலும் எச்சரிக்கை அடையத் தூண்டுகிறது. இதில் உண்மை - நீங்கள் சொல்வதற்கும் எதிராக இருந்தால் எம்மை ஏமாற்றுவதன் முடிவு என்னவாக இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்" எச்சரித்தார். இக்கூட்டத்தின் முடிவில் புறோவாவுடன் தொடர்புள்ள பல சக்திகளும் A.G.K இன் மீது சந்தேகம் தெரிவிக்கிறார்கள். அமைப்பு இன்னமும் அவரை ~~[illegible]~~ நம்புகிற போதிலும் கட்டப்படும் அமைப்பின் வழிகாட்டிகளுள் ஒருவர் பற்றிய பரவலான தவறான கருத்துக்களை முறியடிக்க அமைப்புக் கூட்டாக முயற்சிக்கும், அதேவேளை அத்தகைய நிலைபரும் தன்னைத் தெளிவாக அடையாளம் காட்ட முழு முயற்சி எடுக்க வேண்டும். இதன் முதல் பகுதியாக தன்னார்வக் குழு பற்றிய அரசியல் நிலைப்பாட்டையும் தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலும் ஒரு விரிந்த கட்டுரை ஒன்று "நவசகாப்தம்" பத்திரிகையில் வெளிக் கொண்டு வரவேண்டும் அதைமுதலாவதாக A.G.K செய்ய வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இம்முடிவுக்குட்பட்டு தன் மீதான பரந்த குற்றசாட்டுக்கு எதிரான உண்மை விபரத்தை அவர் அமைப்புக்குத் தராது தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்தார்.

1987-05-24, 25, 26 ந் திகதிகளில் நடந்த செயற் கமிட்டிக் கூட்டத்திற்கு முன்வைத்த பிரேரணைகளில்

படிப்பகம்

www.padippakam.com



விலகுவதாகவும், அதே போன்று கமிட்டி அங்கத்தவர்களில்
மற்றோர் நபரான A.ஜ.K (சச்சி) தானே தொடர்ந்து கமிட்டியில்
செயல்பட முடியாது உள்ளபடியானும் தான் வகித்த பொறுப்பில்
இருந்து நிறைந்த பட்சம் கீழ அமைப்பாளனாகவும் செயல்பட
முடியாதுள்ளது என அறியத்தந்தார். நடந்த செயற்கமிட்டிக்
கூட்டத்தில் அவர்கள் இருவரின் கோரிக்கையும் மனப்
பூர்வமாக கமிட்டியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. <u>அமைப்பின்</u>
<u>கூடிய நடவடிக்கைகள் மேலும் முடுக்கி</u>
<u>விழிப்புணர்வுடன்</u>
<u>விடப்பட்டது.</u>

எம் என் முத்து அதன் பின்னர் தனது குடும்ப வாழ்நிலை
சிக்கலை அமைப்புக்கு முன்வைத்தார். பின்னர் தானாகவே வெளிநாடு
செல்வது என்ற முடிவுக்கும் வந்தார். வெளிநாடு சென்றும் விட்டார்.

அமைப்பு மேற்கொண்ட விழிப்பான நடவடிக்
-கைகளால் A.ஜ.K க்கும் இந்தியாவில் உள்ள முக்கிய
தன்னார்வக் குழு நிதி நிறுவனங்களுக்கும் தொடர்புள்ளது
கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 1987க்குப் பின் இது வரையிலும்
இலங்கை ரூபா 50,000/= வரையிலான பணம் அவருக்கு
இந்தியாவிலுள்ள தன்னார்வக்குழு நிதி நிறுவனங்களால்
அனுப்பப்பட்டுள்ளது. மேலும் 70,000/= அளவிலான பணம்
A.ஜ.K க்கும் பணம் அனுப்பி வந்த நிறுவனங்களின்
இயக்குனர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவுகளால் முடக்கப்பட்டு
ள்ளது.

"சமூக விஞ்ஞான கல்வி வட்டம்" என்ற பெயரில்
5 நபர்கள் (AஜK தவிர்ந்த ஏனைய நால்வரும் புளொவா..
உறுப்பினர்கள் அல்ல) இணைந்து "சமூக விஞ்ஞானச்சுடர்
என்ற பத்திரிகை ஒன்றை பெரும் ஆரவாரத்திற்கு மத்தியில்
கிளிநொச்சியில் வெளியிட்டனர். இந்த சமூக விஞ்ஞானக்
கல்வி வட்டத்தின் கொள்கை, நடைமுறைகள் அடங்கிய
ஒரு பட்டியல் தயாரித்து, அதனை இயக்க முதல் தவணைப்
100,000 ரூபா அளவில் பணமாக, சர்வதேச அளவில் உள்ள
(வட்சம்)
விசேடமாக இந்தியாவில் உள்ள தன்னார்வ நிதி நிறுவனங்
கிளிடம் கோரியுள்ள செயல் ஆதாரங்களுடன் கண்டு பிடிக்
-கப்பட்டுள்ளது. இங்குள்ள (இலங்கையில்) பல தன்னார்வ
நிதி நிறுவனங்களுக்கும், இவ்வழியில் கைதேர்ந்த முக்கிய நபர்
களுக்கும் AஜK க்கும் இடையில் நெருங்கிய தொடர்பு
தெரியவந்துள்ளது எமது அமைப்புக்கு.

படிப்பகம்

www.padippakam.com

இவற்றுக்கு ஆதாரபூர்வ அறிக்கைகள் எதையும் இங்கு வெளியிடவில்லை. அது மிகவும் இரகசியமானது. ஆனால் ஆதாரம் தேவையெனில் நவசிகாப்தம் வெளியீட்டுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

* இரண்டாவது பிளீனம் A.G.காந்தனை அமைப்பின் அடிப்படை உறுப்பினர் [redacted] தகமையில் இருந்து எந்தக் கேள்விகளுக்கும் இடமின்றி அமைப்பைவிட்டு வெளியேற்றுகின்றது. இதுவரையில் ஏதாவது அமைப்பு ரீதியாக தொடர்பு கொண்டிருந்த புரட்சிகர அமைப்புக்கள், சனநாயக அமைப்புக்கள், தனிநபர்கள் அவருடனான உறவை நிறுத்துமாறு இரண்டாவது பிளீனம் கேட்டுக் கொள்கிறது.

* 1987 இல் இருந்து விழிப்புணர்வுடன் A.G.K இன் அமைப்புப் பகுதி வேலைகளுள் இயங்கி வந்த தோழர்கள் பிளீனத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையும் வெளியிடுகின்றோம்.

* A.G.K தனது கடைசி அரசியல் அக்கினிப் பிரவேசமாக கிட்டிய கால செய்திகளின்படி L.T.T.E யில் இணைந்துள்ளார். L.T.T.E இயக்கத்தினூடாக ஒரு மார்க்சிய - லெனினிய இயக்கத்தை கட்ட முடியுமென கூறியுள்ளார். புறோவா அமைப்புக்காக வேலை செய்யும் பல்வேறு தளங்களில் உள்ளவர்களும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனக் கோருகிறது பிளீனக் கூட்டம்.

* எம்.எஸ் (முத்து) இவர் வெளிநாடு செல்வதற்காக போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதாக பரவலாக அமைப்பிற்கு முன்வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களினை அமைப்பு முயற்சித்து நேரடியாக உறுதி செய்து கொண்டுள்ளது. அதேவேளை அவரையும் அமைப்பின் அடிப்படை உறுப்பினர் தகமையிலிருந்து நீக்கம் செய்கிறது — இரண்டாவது பிளீனம் அவருடன் தொடர்புள்ள புரட்சிகர அமைப்புக்கள், சனநாயக அமைப்புக்கள், தனிநபர்கள் அவரைப் புறோவாவின் பிரதிநிதி எனக் கருதி உறவு கொள்வதை நிறுத்தும்படி கேட்டுக் கொள்கிறது.

இரண்டாவது பிளீனக் கமிட்டி
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்
இலங்கை (PROVO)



படிப்பகம்

www.padippakam.com



இதைப்படிக்கும் அவருக்கு தன்னார்வக்குழு நிதி நிறுவனங்கள் என்றால் என்ன? அவற்றுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் என்ன தொடர்பு? ஏன்? எப்படி அவை புரட்சிகர மக்களுக்கு எதிராக இருக்கின்றன? புரட்சிகர இயக்கத்தை எப்படிக் காட்டிக் கொடுக்கின்றனர்? தன்னார்வக் குழுக்கள் அவற்றின் சதிச் செயற்பாடுகள் இவற்றை இயக்கும் முக்கிய நபர்கள் இக்குழுக்களின் உழைப்புக்காக அதே வேளை சேவை மனப்பான்மையுடன் வேலை செய்யும் நபர்கள் இது போன்ற கேள்விகளுக்கும் இவை மீது ஒரு புரட்சிகர மக்கள் இயக்கத்தின் பார்வை, அணுகுமுறை என்னவாக இருக்க வேண்டும் என்பதினையும் வெளிவர இருக்கும் வெளியீடுகளில் நீங்கள் காணலாம்.

" பூரணமான பொருள்முதல்வாதிகள், அச்சமற்றவர்கள் நமது சக போராளிகள் எல்லோரும் துணிகரமாகத் தமது தோள் கொடுப்பர்; கஷ்டங்கள் பொறுப்புக்களுக்கு தோள் கொடுப்பர்; பின்னடைவு எல்லாவற்றையும் வென்று கொள்வர்; பின்னடைவு களுக்கோ அல்லது ஏளனங்களுக்கோ அஞ்சமாட்டார்கள், கம்யூனிஸ்டுக்களாகிய எங்களை விமர்சனம் செய்வதற்கும் நமது ஆலோசனைகளைத் கொடுப்பதற்கும் அஞ்சமாட்டார்கள், என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

" ஆயிரம் வெட்டுக்களாலும் இறப்பதற்கு அஞ்சாத ஒருவன் தான் சக்கரவர்த்தியை குதிரையிலிருந்து இழுத்து வீழ்த்தும் துணிவு உடையவன்" இதுவே சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டி வளர்க்கும் நமது போராட்டத்திற்கு தேவையான தீராத உணர்வு.

விமர்சனம் - சுயவிமர்சனம் என்ற மார்க்சிச - லெனினிச ஆயுதம் நம்மிடம் உண்டு கூடாத நடையை நீக்கி, நல்ல நடையை நாம் வைத்திருக்க வேண்டும்.

" சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 7வது மத்திய கமிட்டியின் 2வது பிளீனக் கூட்டத்தின் அறிக்கை"

படிப்பகம்